## கேள்வி:

## "சபையின் நித்திய அடைவிடம் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?"

## பதில்:

*இந்தக் கேள்வி உண்மையாயிருப்பவர்களுக்கு (வெளி. 2:10) காத்திருக்கும் வெகுமதியை மையமாகக் கொண்டுள்ளது. இந்தப் பாடங்களை வாசிக்கின்ற யாவரையும், புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினராகும் விருப்பத்தை இப்பாடங்கள் ஏற்படுத்தியிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.*

தேவனுடைய நித்திய நோக்கத்தின்படி சபையானது கிறிஸ்துவுக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் எவ்வளவு ஊக்கமூட்டக் கூடியதாய் உள்ளது! தேவனுடைய அநந்த ஞானமானது "எல்லாத் தலைமுறைக்கும் என்றென்றும்" சபையின் மூலமாகத் தெரியவந்துள்ளது (எபே. 3:10, 11, 21). உலகத்தோற்றத்துக்கு முன்னதாகவே, அன்புள்ள ஒரு தேவனுடைய சிந்தையில், சபைக்கென்று பரலோகத்திலுள்ள நித்திய அடைவிடமானது முன்தீர்மானிக்கப்பட்ட உண்மையாயிருக்கிறது (1 பேது. 1:20).

உண்மையாகவே பரலோகத்தின் வேத ரீதியான விளக்கங்களைப்பற்றி தியானிக்கையில் ஒருவர் "தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசி பார்க்கிறார்" (எபி. 6:5). பல வித்தியாசப்பட்ட விளக்கங்களை வேதாகமம் நமக்குக் கொடுத்து, நமது நித்திய அடைவிடத்திற்காக கிறிஸ்தவர்களாகிய நம்மை ஏங்கச் செய்கின்றது.

### ஜீவ விருட்சத்தில் பங்கடைதல்

ஏதேன் தோட்டத்தில், நன்மை தீமை அறியும் மரத்துடன், ஜீவன் கொடுக்கும் வல்லமையுள்ள "ஜீவ விருட்சம்" என்றழைக்

கப்பட்ட மரமும் இருந்தது. அது காணக்கூடிய, தொடக்கூடிய ஒரு மரமாய் இருந்தது. ஒருவர், "தன் கையை நீட்டி, அதன் கனியைப் பறித்து, புசித்து என்றைக்கும் உயிரோடிருக்க" (ஆதி. 3:22) முடியும். ஆதாமும், ஏவாளும் தங்களைத் தகுதியற்றவர்களென நிரூபித்த பிறகு, தேவன் அந்த மரத்திலிருந்து அவர்களைப் பிரித்துவைத்து, அதைக் கேருபீன்களைக் கொண்டு காவல் பண்ணுவித்தார். அம்மரம் எவ்வளவு நாட்கள் அத்தோட்டத்தில் இருந்ததென்றோ, அதன் பிறகு அதற்கு என்ன நேர்ந்தது என்றோ ஒருவரும் அறியவில்லை. வேதாகமத்தில் ஆதியாகமத்தைத் தொடர்ந்து வருகின்ற அறுபத்து நான்கு புத்தகங்களிலும் அம்மரம் குறிப்பிடப்படவில்லை. (நீதி. 11:30 ஒரு தெளிவான விதிவிலக்கல்ல.) இருப்பினும் பரலோகத்தின் நித்திய திட்டத்தின்படி, அம்மரம் மறக்கப்படவில்லை. அம்மரத்தைப் பற்றிய சிந்தனை வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தில் புதுப்பிக்கப்பட்டது - இனி அது காணக்கூடிய, தொடக்கூடிய, பூமிக்குரிய மரமல்ல, ஆனால் பரலோகத்தில் ஒரு ஆவிக்குரிய விளக்கமாக உள்ளது. ஏதேன் தோட்டத்தின் மரத்தினால் குறிக்கப்பட்ட ஜீவன், இப்பொழுது பரலோகத்திற்குரிய ஒரு மரத்தினால் ஏற்பட்டிருப்பதை எண்ணி நாம் களி கூருகின்றோம் (வெளி. 2:7).

சாதாரண மக்கள் ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கின்றனர் (1 பேது. 3:10). கிறிஸ்து ஜீவனைக் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தார் (யோவா. 10:10). அவர் மரணத்தை அழித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (2 தீமோ. 1:10). அவர் ஒருவரால் மட்டுமே, "மரணத்துக்கு அதிபதியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கவும், ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனமுள்ளவர்கள் யாவரையும் விடுதலை பண்ணவும்" முடியும் (எபி. 2:14, 15). அவர் ஒருவரால் மட்டுமே, "... பயப்படாதே, நான் முந்தினவரும், பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களையுடையவராயிருக்கிறேன்" என்று கூற முடியும் (வெளி. 1:17, 18).

இதைத் தொடர்ந்து, இயேசு உண்மையாயிருக்கிற சபை உறுப்பினர்களுக்கு, ஜீவவிருட்சம் உருவகமாய் மாற்றி

நடப்பட்ட இடத்தில் வசிக்கும் சிலாக்கியத்தைத் தந்திருக்கிறார் என்பது உண்மையாகும், அங்கு மரத்தின் கனியை நெருங்குவதற்கு தடை செய்ய கேருபீன்கள் இல்லை; இருப்பினும் சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அதன் கனியை உண்ண மாட்டார்கள். "மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலையும், அந்தக் கால கட்டத்தையும் அடையப் பாத்திரராய்க் கருதப்படுகிறவர்கள்" மட்டுமே இந்தச் சிலாக்கியத்தைப் பெறுவார்கள், பரலோகத்தின் மரத்தினுடைய கனியை உண்ணுபவர்கள் மரணமடைவதில்லை, "அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவ தூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" (லூக். 20:35, 36).

ஆரம்பத்தில் ஜீவ விருட்சம் வைக்கப்பட்டிருந்த தோட்டத்தின் பெயராகிய "ஏதேன்" என்பதற்கு "மகிழ்ச்சி" என்று பொருள். இரண்டாவது மரம் வைக்கப்பட்டுள்ள இடமான "பரதீசு" என்பதற்கு "ஒரு பூங்கா அல்லது ஒதுக்கப்பட்டது, மகிழ்ச்சியான ஒரு இடம்" என்று பொருள்.[1] பரலோகமானது, "பளிங்கைப் போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதி, தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிற" (வெளி. 22:1) ஒரு பூங்கா அல்லது தோட்டமாக உருவகம் செய்யப்படுகிறது. நதியின் இரு கரைகளிலும், "பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருக்கிறது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" (வெளி. 22:2).

## ஜீவகிரீடம் அணிவிக்கப்படுதல்

உண்மையுள்ள சபை உறுப்பினர்களின் நித்திய அடைவிடத்தைப்பற்றி இரண்டாவது உருவகமாக அவர்களுக்கு ஜீவகிரீடம் அணிவிக்கப்படுதல் விளக்கப்படுகிறது (வெளி. 2:10). வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இந்த கிரீடம் ஒரு மணி முடியல்ல, ஒரு மணிமுடியானது இராஜா ஒருவரால் அவரது சந்ததியில் பிறந்த அவரது மகனுக்கு அளிக்கப்படுகிறது. இது பழங்கால உடற்பயிற்சி விளையாட்டுகளில் வென்ற குழுவினருக்கு அணிவிக்கப்படுகிற மாலை அல்லது தலைசூடிக்கு ஒப்பாக உருவகமாய்ப் பேசப்படுகிறது. ஒலிம்பிக் கிரீடத்தில் இருக்கும் மலர்கள் அழியக் கூடியவைகள், ஆனால் கிறிஸ்தவர்

களின் கிரீடம் அழியாதது (1 கொரி. 9:25). ஒலிம்பிக் கிரீடம் வாடக் கூடியது, கிறிஸ்தவர்கள் பெறும் கிரீடத்தின் மகிமை என்றுமே வாடாதது (1 பேது. 5:4). பவுல், பரலோக இராஜ்யத் தில் தமக்காக வைக்கப்பட்டுள்ள நீதியின் கிரீடத்தைப்பற்றிக் களிகூர்ந்தார் (2 தீமோ. 4:8).

## மன்னாவை உண்ணுதல்

என்றைக்கும் அழியாத ஜீவனைப்பற்றிய மூன்றாவது உருவகமானது, எபிரெயர்கள் வனாந்தரத்தில் திரிந்து கொண்டிருந்த சம்பவத்திற்குப் பின்னோக்கிச் செல்லுகிறது. தேவன் அற்புத விதமாக உணவளிக்காதிருந்தால் அந்த மக்கள் பட்டினியாயிருந்து மரித்திருப்பார்கள். இரவிலே பாளை யத்தின்மேல் பனிபெய்யும்போது, “மன்னா” என்றழைக்கப் பட்ட ஒன்றும் அதனோடு விழுந்தது (எண். 11:9). அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது (யாத். 16:31). நாற்பதாண்டுகள் வனாந்தரப் பிரயாணத்தில் தேவன் இவ்வுணவைக் கொண்டு மக்களை உயிர் வாழச் செய்தார். பரலோகத்திலிருந்து வந்த இவ்வுணவு, பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பாளர்களால் arton angelon, “தூதர்களின் அப்பம்” என்று அழைக்கப்பட்டது (சங். 78:25). KJVயில் இது “தூதர்களின் உணவு” என்று கூறப்படுகிறது. ஒருவேளை தூதர்களின் மூலமாக தேவன் உணவளித்தார் என்பது இதன் பொருளாயிருக்கலாம். மாம்சப் பிரகாரமான மன்னா எபிரெயர்களுக்கு, வாழ்வு மற்றும் சாவு இவைகளுக் கிடையிலிருந்த மாறுபாடாக இருந்தது போலவே, மீட்கப் பட்டவர்கள் பரலோகத்தில் ஆவிக்குரிய முறையில் என்றென் றும் வாழ்வதற்கு “மன்னா” என்பது வைக்கப்பட்டுள்ளது (வெளி. 2:17).

## எழுதப்பட்ட வெண்மையான குறிக்கல் தரப்படுதல்

விசுவாசமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் இயேசு கொடுக்கின்ற நித்திய ஆசீர்வாதத்தின் நான்காவது விளக்கம் ஒரு வெண்மையான குறிக்கல் ஆகும் (வெளி. 2:17). ரோமாபுரி விசாரணைகளில், குற்றவாளிகள் கறுப்பு நிறக் கற்களினாலும்

குற்றமற்றவர்கள் வெண்மை நிறக் கற்களினாலும் குறிப்பிடப் பட்டனர். இதே போலவே, இப்பொழுது ஆவியின்படியாக வாழ்கின்றவர்களுக்கு, பரலோக உலகில், ''கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை'' (ரோமர் 8:1). குற்றமற்றவர்களுக்கான இவ் வெண்மையான கல் என்பது ஒவ்வொருவருக்குமான இரட்சிப் பையும் விளக்கப்படுத்துகிறது. முழு சபையுமல்ல மாறாக விசுவாசமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு வெண்மையான குறிக்கல்லைப் பெறுவார்.

மேலும்,இக்கல்லைப் பெறுகிறவர் மட்டுமே அறியக்கூடிய தனியான நாமம் ஒன்று இதன்மேல் எழுதப்பட்டிருக்கும் என்னும் போது, இக்கல் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அங்கிகரிக்கப்பட்டு, கர்த்தரிடம் வெகுமதி பெறுவதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. ஒருவர் பரலோகம் செல்வது (கறுப்புக் கல்லுக்குப் பதில் வெண்மையான கல்லைப் பெறுவதாக விளக்கப்படுகிறது) என்பது அற்புதமாயிருக்கும்; ஆனால், ஒவ்வொரு கல்லிலும், கர்த்தர், ஒரு தனிப்பட்ட நாமத்தை எழுதுகிறார் என்பது அந்த நல்ல உலகத்தில் அவரவர் பெறும் சந்தோஷத்தின் அளவைக் குறிப்பது தெளிவாகிறது. ஆகவே, கிறிஸ்தவர்கள் ஒரு பகுதி அல்லது சாதாரண பலன் களையல்ல மாறாக "பூரண பலனை" (2 யோவா. 8) பெறும் படியான ஊழியம் செய்யும்படி உற்சாகப்படுத்தப் படுகின்றனர். மனம் மாறிய ஒருவர், உண்மையாயிருந்து பரலோகத்திற்குச் செல்லுகிறபோது, அந்த ஆத்துமாவை ஆதாயம் செய்தவருக் குரிய பலனில் ஒரு பங்காக அவர் அமைகிறார் (1 கொரி. 3:14). கர்த்தருடைய வருகையின்போது அவர், அந்த ஆத்தும ஆதாயம் செய்தவருக்கு "பெருமகிழ்ச்சியின் கிரீடமாக" அமைகிறார். தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, பவுல், ''எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; நீங்கள் எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்'' (1 தெச. 2:19, 20) என்று எழுதினார்.

# வெள்ளை ஆடை அணிவிக்கப்படுதல்

கிறிஸ்தவர்கள் சுத்தமான வாழ்க்கை நடத்தும்படிக்கு அவர்களை ஊக்குவிப்பதற்கு, பரலோகத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும் வஸ்திரங்கள் என்ற ஐந்தாவது உருவகம் காட்டப்படுகிறது: வெண் வஸ்திரங்கள் (வெளி. 3:5). காணப் படாமலிருந்த ஒரு நபருக்கு செய்யவேண்டியது பற்றிய தேவனுடைய கட்டளையை இது நேர்மாறாக நமக்கு நினை வூட்டுகின்றது: "இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்து போடுங்கள்" (சகரியா 3:4). கிறிஸ்தவர்கள் தங்களை "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க" சுத்திகரித்துக் கொள்ளுகையில் ''பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்துகின்றனர்'' (2 கொரி. 7:1), அவர்கள் பரலோகத்தில் ஒரு கறையற்ற, பரிசுத்தமான ஆடை அணிவிக்கப்படுதலுக்குத் தங்களை ஆயத்தப்படுத்துகின்றனர். கர்த்தர் அவர்களைக் குறித்து வெட்கப்பட மாட்டார்; அவர் ஏற்கனவே, "அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண் வஸ்திரந்தரித்து என்னோடே கூட நடப்பார்கள்" (வெளி. 3:4) என்று அறிவித்திருக்கிறார்.

"பாத்திரவான்கள்" என்ற வார்த்தை இணங்குமளவு புரிந்து கொள்ளப்பட வேண்டும். சந்தேகத்திற்கிடமின்றி, ''எங்களு டைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது" (ஏசா. 64:6). பவுல், "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே. ... நம்மை இரட்சித்தார்'' (தீத்து 3:5) என்று எழுதினார். ஒவ்வொரு கட்டளையின்படியேயும் நாம் நடக்க முடிந்தாலும், பின்னும் கூட நாம் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாகவே இருப்போம் (லூக். 17:10). நாம் கிருபையினாலே இரட்சிக்கப் பட்டிருக்கிறோம், ஆனால், ''அது கிருபையினாலே உண்டா யிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்ல வென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால் கிரியையானது கிரியையல்லவே'' (ரோமர் 11:6). ஒருவரும் தங்கள் இரட்சிப்பைப்பற்றி தங்களையே மேன்மை பாராட்டிக் கொள்ள முடியாது (எபே. 2:8, 9); இருப்பினும் நாம் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால் (மத். 7:21), தேவனுடைய நகரத்தினுள் வாசல்கள் வழியாகப் பிரவேசிக்க முடியாது

*(எபி. 5:9; வெளி. 22:14). நாம் அபாத்திரர்களாயிருந்த போதிலும், அவரது இரத்தத்தினால் நிறைந்த ஊற்றில் கழுவப்படுகின்றபோது கர்த்தர், நம்மை நீதியுள்ளவர்களாக நிலைநிறுத்தச் சித்தமுள்ளவராயிருக்கிறார் (சகரி. 13:1; 1 கொரி. 6:11; வெளி. 1:6).*

## அதிகாரம் பெறுதல்

*நித்திய சந்தோஷத்தின் நிலையில் இன்னொரு பாகம், ஜெயங் கொள்ளுகிற அனைவருக்கும் அளிக்கப்படுகின்ற அதிகாரம் ஆகும். இரண்டாம் சங்கீதத்தில் இயேசு இருப்புக் கோலால் தேசங்கள் அனைத்தையும் ஆளுகை செய்வது முன்னுரைக்கப்பட்டது (அவர் தமது வல்லமையுள்ள தூதர்களோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வருகின்றபோது அப்படியாகும்; 2 தெச. 1:7-9). இயேசு தம்மைப்பற்றி தாவீது கூறியதை நினைவில் வைத்து, தேசங்களை ஆளுகை செய்வதில் தம்மோடு பங்கேற்கப் போகிறவர்களில் தமது சீஷர்களையும் அதில் உள்ளடக்கினார் (வெளி. 2:27). உலகத்தின் இராஜ்யங்களைக் கர்த்தர் தமது ஆளுகையின் கீழ் கொண்டு வருகையில் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பக்கம் இருப்பார்கள் (வெளி. 11:15).*

*ஒரு வகையில், இந்த வாழ்க்கையிலேயே கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடன் அரசாளுகின்றனர். பாவத்தின் வல்லமையை அவர்கள் வெல்லும்போது, தங்கள் சரீரங்களில் பாவத்தின் ஆளுகையை அவர்கள் மறுக்கும்போது, அவர்கள் ஆளுகை செய்கின்றனர் (ரோமர் 6:12). இப்பொழுது அவர்கள் இராஜாக்களாகவும் (அல்லது "ஒரு ராஜ்யம்"), ஆசாரியர்களாகவும் இருக்கின்றனர் (கொலோ. 1:13; வெளி. 1:6; 5:10).* KJV *மற்றும்* NASB *மொழிபெயர்ப்புகள் தவறான கையெழுத்துப் பிரதிகளைப் பின்பற்றி, வெளி. 5:10ல் கிறிஸ்தவர்கள் பூமியில் அரசாளுவார்கள் என்று எதிர்கால வினையில் குறிப்பிட்டுள்ளன. பூமியில் அரசாளும் செயல்கள் யாவும்* ASV *மொழிபெயர்ப்பில் வெளி. 5:10 கூறப்பட்டுள்ளபடி ("... அவர்கள் பூமியின் மீது அரசாளுகின்றனர்") இப்பொழுது நடத்தேறுகின்றதாக உள்ளது. கர்த்தருடைய வருகையின்போது பூமியானது எரிந்து போகும், ஒருவரும் அரசாளுவதற்கு பூமி அப்போது இருக்கப் போவதில்லை (2 பேது. 3:10-12).*

*கர்த்தர் தோன்றும் அந்த நாளில், கிறிஸ்தவர்கள் அவரு*

டைய அரியணையில், அவருடன் வாழ்ந்து அரசாளுவார்கள் (2 தீமோ. 2:11; வெளி. 3:21), இது பெந்தெகொஸ்தே நாளன்று அவர் ஜெயங்கொண்டு பரத்துக்கேறி பிதாவினுடைய அரியணையில் அமர்ந்தது போன்றதாகும். அவர் பிதாவின் அரியணையைத் தமது அரியணையாக்கிக் கொண்டார் (லூக். 22:29; கொலோ. 1:13).[2] நியாயத்தீர்ப்புக்குப் பிறகு அவர் அதிகாரத்தைத் தமது பிதாவினிடம் திருப்பித் தருவார், தாமும் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் (1 கொரி. 15:28).

வேறொரு வகையில் நியாயத்தீர்ப்புக்குப் பின்பு, கிறிஸ்து என்றென்றும் தமது ஆளுகையைத் தொடர்வார், அது அவரது பிதாவுக்குக் கீழானதும், பிதாவினுடனிருந்தாளுவதும் ஆகும் (எபி. 1:8). தேவனுடைய அரியணை அப்போதும் இயேசுவினு டைய அரியணையாகவே இருக்கும் (வெளி. 22:1). இவ்வகை யில் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுடன் கூட என்றென்றும் தொடர்ந்து அரசாளுவார்கள் (வெளி. 22:5).

## ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படுதல்

தேவனுடைய மக்களுக்கு நித்திய ஆசீர்வாதம் உண்டு என்பதற்கு நிறைவான உறுதியாக, அவருக்கு முன்பாக ஞாபகப் புத்தகம் ஒன்று எழுதப்பட்டிருக்கிறது (மல்கி. 3:16). உண்மையில், தேவன் எதையும் எப்போதும் மறக்க முடியாது; ஆனால் அவர் இந்த வாக்குத்தத்தத்தை மானிட உருவக நடையின் (மனிதப் பண்புகளின் வழியே சூழ்நிலையை விளக்குதல்) மூலம் கொடுத்திருக்கிறார். அவர் தம்மைப் பிரியப்படுத்துகிறவர்களின் பெயர்களைக்கொண்ட ஒரு புத்தகத்தை வைத்திருப்பவராகக் காட்டுகிறார்.

ஒரு வகையில், உலகத் தோற்றமுதல் ஜீவ புத்தகத்தில் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது (வெளி. 17:8). இருப்பினும், அவைகள் எழுதப்படுவது கட்டுக்குள்ளானதல்ல, ஏனெனில் அவர்களின் உண்மைத் தன்மை மற்றும் செயல்களே அவர்களின் பெயர் எழுதப்படுவதற்கான தேவனுடைய முன்னறிவாக உள்ளது (வெளி. 17:14; 22:12). அதில் பெயர் எழுதப்பட்டிராதவர்கள் தீட்டுள்ளவர்கள், அருவருப்பானவர் கள் மற்றும் பொய்யை நடப்பிக்கிறவர்கள் ஆவார்கள் (வெளி. 21:27). அதில் எழுதப்பட்டுள்ள பெயர்கள் கிறுக்கிப்

போடப் படக்கூடும் (யாத். 32:33; வெளி. 3:5).

அற்புத வல்லமைகளைக் காட்டிலும், ஜீவ புத்தகத்தில் ஒருவருடைய பெயர் எழுதப்படுவது அதிக முக்கியமான தென்று இயேசு தமது சீஷர்களுக்கு போதித்து உற்சாக மூட்டினார் (லூக். 10:20). பவுலுக்கு, அவருடைய உடன் ஊழியர்கள் சிலருடைய பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது சந்தோஷமளித்தது (பிலி. 4:3). எபிரெய நிருபத்தின் ஆசிரியர், அச்சபைகளில் இருந்தவர்கள் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற, முதற் பேறானவர்கள் என்று கூறினார் (எபி. 12:23).

## கிறிஸ்துவுக்கென்று நிச்சயிக்கப்பட்ட மணவாட்டியாகுதல்

கிறிஸ்துவுக்கும் அவரது மக்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய ஐக்கியத்தை, ஒரு திருமணமாக வேதாகமம் விளக்குகிறது, அசுத்தமான பாவி ஒருவர் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிகையில், திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக் கினால் பரிசுத்தமாக்கப்பட்டவுடனே (எபே. 5:26) கிறிஸ்து வின் மணவாட்டியின் ஒரு பாகமாக மாறுகிறார். சுத்திகரிக்கப் பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டதும், மரித்து உயிர்த்த கிறிஸ்து வுடன் அவர் திருமணம் முடித்து வைக்கப்படுகிறார் (ரோமர் 7:4). இவ்விதமாக அவர் “கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாத” (எபே. 5:27) பரிசுத்த மனைவி (கிறிஸ்துவின் சபை) யின் உறுப்பாகிறார். மனித திருமண உறவின் சந்தோஷ மானது இவ்விதமாய், பாவி ஒருவர் கிறிஸ்துவோடு ஐக்கிய மாவதில் உள்ள சந்தோஷத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

இனிவரும் உலகத்தைப்பற்றி ஒருவர் நினைக்கையில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு மணம் முடித்து வைக்கப்படும் இவ்விளக்கம் மாறுபடுகின்றது. அவ்வகையில், கிறிஸ்தவர்கள் இன்னும் கிறிஸ்துவுக்கு மணம் முடித்துக் கொடுக்கப்பட வில்லை, ஆனால் மணம் முடிக்க நிச்சயிக்கப்பட்டுள்ளனர், மறுவாழ்க்கையில் அத்திருமணம் நடந்தேற வேண்டியுள்ளது. கொரிந்துவிலிருந்தவர்கள் (கேள்விப்பட்டு, விசுவாசித்து மற்றும் ஞானஸ்நானம் பெற்று) சபையின் உறுப்பினர்களான போது (அப். 18:8; 1 கொரி. 1:1, 2), அவர்கள் இயேசுவுக்கு நிச்சயிக்கப் பட்ட மனைவியானார்கள். அவர்களை அவ்வாறு நிச்சயம்

செய்த பவுல், ''நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்த படியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்" (2 கொரி. 11:2) என்று கூறினார். உலகத்தின் முடிவு நாளே திருமண நாள் ஆகும், அப்போது, ஆட்டுக்குட்டி யானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மணவாட்டி "தன்னை ஆயத்தம் பண்ணினாள்" (வெளி. 19:7). கொரிந்துவில் இருந்தவர்கள் தங்களை மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்த மாகுதலை தேவ பயத்தோடு பூரணப்படுத்த வேண்டியிருந்தது (2 கொரி. 7:1). அவர்கள் திருமண ஆடை கொண்டு ("சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே,'' வெளி. 19:8) தங்களை அலங்கரிக்க வேண்டியிருந்தது. இந்த நோக்கங்களை நிறை வேற்றச் செய்யும் முயற்சியில், அவர்கள் தங்கள் பலமனைத்தை யும் ஒன்று செலுத்தி, வரப் போகும் மணவாளனுக்காக ஆயத்த மாக வேண்டியிருந்தது. எல்லா நாட்களிலும் சிறந்த நாள் அதுவே யாகும்! யோவான், ''ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்'' (வெளி. 19:9) என்று எழுதினார்.

ஒரு கலியாண விருந்தில் விருந்தினராக இருப்பதைப் பார்க்கிலும், இந்தக் கலியாண விருந்து கிறிஸ்தவருக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகும்; ஏனெனில் கிறிஸ்தவர் தம்மையே அன்று கிறிஸ்துவின் மணவாட்டியாகக் காணுவார். இதன் விளைவாக, தனது திருமண நாளுக்கென்று தன்னைப் பரிசுத்தமாகக் காத்துக் கொண்ட ஒரு பெண்ணின் இருதயத் தில் ஏற்படும் பெருமகிழ்ச்சி அவருக்கு ஏற்படும்.

## முடிவுரை

கர்த்தருடைய சபையில் நீங்கள் ஒரு உறுப்பினராக இல்லா திருந்தால், உடனே நீங்கள் ஒரு உறுப்பினராகும்படி உங்களை வேண்டுகிறோம். நீங்கள் ஒரு உண்மையுள்ள உறுப்பினராக இருந்தால், நீங்கள் ஆதியிலே கொண்டிருந்த அன்புக்கு (வெளி. 2:4, 5) திரும்பும்படி உங்களுக்கு அறிவுறுத்துகிறோம். இப்பாடத்தைப் படிக்கின்ற யாவரும் "கர்த்தருடைய கலியாண விருந்தில்" கலந்து கொள்ள வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாக உள்ளது!

## குறிப்புகள்

[1]"பரதீசு" என்ற வார்த்தைக்கு வேத வசனத்தில் (லூக். 23:43; 2 கொரி. 12:3) வேறொரு பொருளும் உள்ளது, ஆனால் இந்த இரண்டாவது பொருள் இப்பாடத்தில் ஈடுப்படுத்தப்படவில்லை. [2]ஆயிர வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள், வெளி. 3:21ஐ தவறாகப் பயன்படுத்துகின்றனர்; அதாவது இயேசு இப்பொழுது அவருடைய சொந்த அரியணையில் அமர்ந்திருக்கவில்லை, பிதாவின் அரியணையில்தான் அமர்ந்திருக்கிறார் என்று அவர்கள் இதை ஆராய்கின்றனர். ஆனால் இரண்டு அரியணைகள் கிடையாது; இருவர் முழு அதிகாரம் பெற்றவர்களாயிருக்க முடியாது. ஒப்புவமையாகப் பார்த்தால், தாவீதின் அரியணை (1 இரா. 1:35) கர்த்தருடைய அரியணையாகும் (1 நாளா. 29:23); இரண்டு அரியணைகள் இருந்ததில்லை.